**தலைப்பு 275 – பொலன்னறுவை மாவட்ட செயலகம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் முதலாம் பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கங்களின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று என்பன தலைப்பு 275 இற்குரிய பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களிலிருந்து வெளிக்காட்டப்படுகின்ற நிதிசார் விடயங்கள் மற்றும் செயலாற்றல் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் வகைகூறல் மீதான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது நிதிப்பிரமாணங்கள் கோவையின் 124 ஆவது நிதிப் பிரமாணத்தின் படி, அரசாங்க நிதியினை ஈட்டுதல் மற்றும் அரசாங்கத்திற்குக் கிடைக்கவேண்டிய நிதிகளை சேகரித்தல் அவ்வாறே அரசாங்கத்தின் அனைத்து நிதி நடவடிக்கைகளினையும் கண்காணிக்கும் பொதுவான கடப்பாடும் நிதி அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரினால் அந்தப் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு நிதிப் பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத்தின் தலைவர் தனது திணைக்களத்தின் அனைத்து நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் கணக்கீட்டு உத்தியோகத்தராக காணப்படுவதுடன், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் பொதுத் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளிற்குள் நின்று தனக்குரிய பணிகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதிப் பிரமாணங்கள் மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல், பேணிச் செல்லல் என்பன இந்தப் பொறுப்பில் உள்ளடங்கியுள்ளன.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தலைப்பு 275 இற்குரிய பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல் தொடர்பில் திட்டமிடுதல், அரசாங்க செலவினம், அரசாங்க வருமானம், மானிட மற்றும் பௌதீக வளங்களின் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாட்டு ஒழுங்குகளை செயற்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கியொழுகுதல் மற்றும் ஏடுகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணிவருதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலத்தில் சமர்ப்பித்தல், செயலாற்றல் சுட்டிகளின் அடிப்படையில் தொடர்புடைய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை வழங்குதல் என்பன தொடர்பில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 02 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளினதும் உறுதிப்படுத்தல் பரிசோதனையின் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் பிரிசோதனைகளினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேலே 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை விபரமாகக் காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புக்களிலுள்ள பொருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையின் 2.1 முதல் 2.21 ஆம் வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது நிதிப்பிரமாணங்கள் கோவையின் 127 மற்றும் 128 ஆவது நிதிப் பிரமாணங்களிலுள்ள தேவைப்பாடுகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கீழே குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களிற்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் தனது கணக்குகள் மீதான கணக்களிப் பொறுப்பினை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப் பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை | அவதானிப்பு உள்ளடங்கியுள்ள அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தினால் வகுக்கப் பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட நடவடிக் கைகளிற்காக நிதி ஏற்பாடு களை மேற்கொள்கையில் பாராளுமன்றத்தின் சவால் களைக் கருத்திற்கொண்டு தமது திணைக்கள செயற்பாடு களை வெளிப்படையாகத் திட்டமிட்டு அமுல்படுத்துவதற் கும் நடப்பாண்டிற்குரிய நிகழ்ச் சித்திட்டங்களை பூரணப்படுத் துவதற்கு மற்றும் / அல்லது உரிய இலக்கினை அடைந்து கொள்வதற்கு முயற்சி எடுத்தி ருத்தல் | 1. செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாகத் தயாரிக்கப்பட்டிராமை | 2.3.1 |
| | | 2. பாதீட்டு மதிப்பீடு யதார்த்தமாக தயாரிக்கப்பட்டிராமை | 2.11 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங் கள் பேணப்பட்டிராமை | 2.15 |
| | | 4. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினை பெற்றுக் கொண்டி ருக்காமை | 2.3.2(அ) |
| | | 5. எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காமை | 2.3.2(ஈ) |
| | | 6. செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல் | 2.3.2(உ) |
| | | 7. கொள்வனவுச் செயன்முறை யினை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.4 |
| | | 8. சொத்துக்களின் பெறுமதிகள் மற்றும் தரம் குறைவடைதல் | 2.5(அ) |
| | | 9. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தனது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட் டிற்கான ஒழுங்கமைப்பு வெற்றி கரமானது என்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்கத் திற்குக் கிடைக்க வேண்டிய கட்டணங்களை சரியாக நிச்ச யித்துக் கொள்வத ற்காக அவற்றை முறைப்படி யாகவும் முழுமையாகவும் காலம் தாழ்த் தாது சேகரித்துக் கொள்வதற் கும் கிடைக்கின்ற பணத்தினை கணக்கீடு செய்வதற்கும், அரசாங்கத்தின் சார்பாக பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு அதிகாரத்தை வழங்குவதற்காகவும் நிறை வேற்றப்பட்ட சேவைகள் வழங் கப்படுவதனை கண்காணித்து பரீட்சிப்பதற்காக மற்றும் அந்த அரசாங்க நிதியங்க ளிலிருந்து அதற்காக காலம் தாழ்த்தாது சரியாகச் செலுத்துவதற்கும் இதன் மூலம் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளமை | பொதுமக்களிற்கான சேவை களை நிறைவேற்றுவதிலுள்ள குறைபாடுகள் | 2.10 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய குறைநிரப்பு ஏற்பாடுகள் தனது திணைக்களத்தில் பின்பற்றப்ப டுகின்றன என்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்களத் தினால் ஏற்பாடுகள் வெளியிடப் படுகின்றன என்றும் | 1. பதிவேடுகள் மற்றும் கணக்கேடுகள் பேணப்பட்டிருக்காமை | 2.15 |
| | | 2. இணக்கமின்மைகள் | 2.16 |
| 128(1)(ஈ) | பெறுவனவுகள், கொடுப்பன வுகள் மற்றும் வழங்கல்களிற் காக போதியளவு உள்ளக புலனாய்வு முறையொன்று பேணப்படுகின்றது என்றும் அந்த முறையின் செயற்திறன் தன்மை அவ்வப்போது ஆராயப் படுகின்றது என்றும் | அரசாங்க உத்தியோகத்தர் களிற்கான முற்பணக் கணக்கு களிலுள்ள குறைபாடுகள் | 2.12 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பிற்காக போதியளவில் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவை அவ்வப்போது மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்றும் அவற்றை உரியவாறு கைதவிர்ப்புச் செய்கையில் அவ்வாறு கைதவிர்ப்புச் செய்தல் உரிய பிரமாணங்கள் மற்றும் அறிவுறுத்தல்களிற்கு இணங்குகின்றன என்றும் | 1. வருடாந்த பொருள் மெய்மையாய்விலுள்ள குறைபாடுகள்<br>2. சொத்துக்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.5(உ)<br>2.5 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியினால் கோருகின்ற தகவல்கள், கூற்றுக்கள் மற்றும் அறிக்கைகளை திருத்தமாக உரிய வேளையில் சமர்ப்பித்தல் | கட்டுநிதி மதிப்பீட்டைத் தயாரிப்பதிலுள்ள குறைபாடுகள் | 2.13 |
| 128(1)(எ) | நிலுவையாகவுள்ள கட்டணங்கள் போன்றவற்றை அறவிடுவதற்காக விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அந்த பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினால் நிலுவைப் பணம் தொடர்பில் அவற்றை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பில் மூன்று மாதங்களிற்கு ஒருமுறை அல்லது வேறு ஏற்பாடுகளினால் குறிப்பிடப்பட்டவாறு தனக்கு அறிவிக்கப்படுகின்றது என்றும் | அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிலுள்ள நிலுவைக் கடன் மீதியினை அறவிடுதல் | 2.12(அ), (ஆ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | அரசாங்கத்தின் செயற்பாடு களை நிறைவேற்றுகையில் எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், வினைத்திறன், முறையான தன்மை மற்றும் நேர்மைத் தன்மை போன்ற விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு தனது திணைக்களத்தின் செயற்பாடு கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதாக | 1. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினை அடைந்திருக் காமை<br>2. எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அடையப்பட்டிருக்காமை<br>3. காலம் தாமதிக்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்ட ங்கள்<br>4. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.3.2(இ)<br>2.3.2(ஈ)<br>2.3.2(உ)<br>2.8 |
| 128(1)(ஐ) | கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் தான் பொறுப்புக் கூறவேண்டிய செல வினத் தலைப்பின் ஒவ்வோர் நிகழ்ச்சித்திட்டத்திற்காகவும் நிதியாண்டின் இறுதியில் ஒதுக் கீட்டுக் கணக்கொன்று பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக் குச் சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதாக | ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதான குறைபாடுகள் | 2.6 |
| 128(1)(ஒ) | பிணை வைப்பதற்குப் பொறுப் புடைய உத்தியோகத்தர்கள் அப்போது வலுவிலுள்ள சட்டங் கள் மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைத்துள்ள னர் என்பதாக | குறித்த உத்தியோகத்தர்களின் பிணை வைத்திலுள்ள குறைபாடுகள் | 2.20 |
| 128(1)(ஓ) | உத்தியோகத்தர்களின்/ ஊழிய ர்களின் தாமதங்கள், கவனயீ னம், தவறுகள், அல்லது மோசடி காரணமாக அரசாங்கத் திற்கு இழப்புக்கள் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் நிதிப்பிரமா ணம் 103 முதல் 108 வரையான நிதிப்பிரமாணங்க ளிலுள்ள ஏற்பாடுகள் கணக்கீ ட்டு உத்தியோகத்தரினால் பின்பற்றப்படுவதாகவும் நிதிப் பிரமாணம் 156(1) இன் படி அந்த இழப்புக்கள் தொடர்பில் பொறுப்புவாய்ந்த உத்தியோக த்தர்களின்/ ஊழியர்களின் மீது மிகை அறவீடு விதிக்கப்படுகின் றது என்பதாகவும் | 1. கிரயம் மற்றும் வினைத்திற னற்ற விதத்தில் சொத்துக்கள் கைதவிர்க்கப்படுதல்<br>2. இழப்புக்கள் மற்றும் சேதங்கள் | 2.5(இ)<br>2.7 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) நியதிச்சட்ட கட்டளைச் சட்டங்களின் வாயிலாக ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுதல்.

(ஆ) அரசாங்கத்தின் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் (சமுர்த்தி மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்) என்பனவற்றை அரசாங்கத்தின் விதிமுறைகள், ஆலோசனைகள், வழிகாட்டல் என்பவற்றிற்கு அமைய அமுல்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல்.

(இ) மாவட்டத்தின் சகல அரச நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக மக்களின் சுபீட்சத்திற்காக நிறைவேற்றப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை சிறப்பாகச் செயற்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் வழிகாட்டல்

(ஈ) அரசாங்கத்தின் மாவட்டப் பிரதிநிதியாகச் செயற்படுதல்.

(உ) மாவட்டத்தில் இயற்கை அனர்த்தம் அல்லது வேறு அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் நடைமுறைரீதியாகஹ தலையீடுசெய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### 2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்களும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற பணிகளும்

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்களும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற பணிகளும் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் | தாபித்தல் அதிகாரம் | பணிகள் |
|---|---|---|
| (i) மெதிரிகிரிய பிரதேச செயலகம்<br>(ii) லங்காபுர பிரதேச செயலகம்<br>(iii) எலஹெர பிரதேச செயலகம்<br>(iv) ஹிங்குரக்கொட பிரதேச செயலகம்<br>(v) தமன்கடுவ பிரதேச செயலகம்<br>(vi) திம்புலாகல பிரதேச செயலகம்<br>(vii) வெலிகந்த பிரதேச செயலகம் | 1992 இன் 58 ஆம் இலக்க பிரதேச செயல கங்களை தாபித்தல் அதிகாரச்சட்டம் | மத்திய அரசாங்கத்தி னாலும் மாகாண சபை யினாலும் ஒப்படைக்கப் படுகின்ற நிர்வாக மற்றும் அபிவிருத்திப் பணிகளை பிரதேச மட்ட த்தில் அமுல்படுத்துதல் |

### 2.3 செயலாற்றல்

#### 2.3.1 திட்டமிடுதல்

**செயல்நடவடிக்கைத் திட்டம்**

தலைப்பு 275 இற்குரிய பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தின் நிதி ஏற்பாடுகள் தொடர்பில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மாவட்டச் செயலகத்திற்கு ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து கிடைத்திருந்த ரூபா 1,664 மில்லியன் நிதி ஏற்பாட்டிற்குரிய செயற்பாடுகள் அந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்காமை

### (அ) செயற்பாடுகள் தொடர்பில் அறிந்து வைத்திருக்காமை

மாகாண சபையொன்றின் ஏதேனுமோர் சட்டத்தினால் தமக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அல்லது ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதேனுமோர் அதிகாரத்தை, செயற்பாட்டை அல்லது பணியொன்றை அல்லது மாகாண ஆளுநரினால் தமக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அல்லது ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதேனுமோர் அதிகாரத்தை, செயற்பாட்டை அல்லது பணியொன்றை தனது நியமன அதிகாரியின் இணக்கப்பாட்டுடன் குறித்த பிரிவில் மேற்கொள்ள வேண்டிய போதிலும், இது தொடர்பில் பிரதேச செயலாளர்கள் அறிந்து வைத்திருக்கவில்லை.

### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றாமை.

மீளாய்வாண்டின் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட நிறைவேற்றப்பட்டிருக்காத செயற்பாடுகள் கீழுள்ளவாறாகும்.

(i) வெலிகந்த பிரதேச செயலகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள 485 செயற்திட்டங்களில் 2017 ஆம் ஆண்டில் 72 செயற்திட்டங்கள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

(ii) லங்காபுர பிரதேச செயலகத்தில் மீளாய்வாண்டிற்காக ரூபா 568,750,000 தொகைக்கு திட்டம் வகுப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 78,943,770 ஆகும். ஆகையால், திட்டமிடப்பட்ட செயற்திட்டப் பெறுமதியில் 14 சதவீதமானவற்றிற்கு மாத்திரமே நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(iii) எலஹர பிரதேச செயலகத்தில் 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்காக திட்டம் வகுப்பட்டிருந்த ரூபா 2,670,000 மதிப்பீட்டுப் பெறுமதி கொண்ட 08 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

### (இ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினை பெற்றுக்கொண்டிருக்காமை

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் கீழ் ஹிங்குரன்கொட பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிரிதலேகம பண்டைய கிராமத்தின் விகாரையின் பின்புறத்திலுள்ள வீதி ரூபா 500,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த வீதியில் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி தவிர்ந்த ஏனைய வாகனங்கள் பயணிப்பதற்காக உள்நுழைய முடியாதிருந்தது.

(ii) கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சூடுமிதித்தல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2017 இன் கீழ் ரூபா 1,044,622 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஹிங்குரன்கொட பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கடுகெலியாவ நிக்ரோதாராம விகாரையிலுள்ள சூடுமிதிக்கும் இடத்தின் நடுப்பகுதி ஏறத்தாழ 14 மீற்றர்கள் முழுமையாக வெடிப்புற்றிருந்தது.

(iii) தமன்கடுவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 13 ஆம் குறிச்சியின் மரணச்சடங்கு நலன்புரிச் சங்கத்தின் தகவல் நிலையத்தினை நிர்மாணித்தல் செயற்திட்டத்திற்காக ரூபா 495,000 வழங்கப்பட்டிருந்த போதிலும், அங்கு தகவல் தொழில்நுட்ப நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இடர் முகாமைத்துவ அமைச்சின் ரூபா 1,361,397 நிதி ஏற்பாட்டின் மீது நிர்மாணிக்கப்பட்டிருந்த மாரசிங்ஹவத்த கழிவோடையின் சில இடங்கள் வெடிப்புற்றிருந்ததுடன், அதன் பக்கவாட்டுச் சுவர்கள் மதிப்பீட்டில் குறிப்படப்பட்டிருந்த அளவுத்திட்டங்களின் பிரகாரம் நிர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை.

**(ஈ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காமை**

(i) உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2016/2018 இன் கீழ் அமுல்படுத்தப்படகின்ற உப உணவுப் பயிர்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எலஹர பிரதேச செயலகப் பரிவிலுள்ள விவசாயிகளிற்கு பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 11,000,000 பெறுமதியான 10,000 கிலோகிராம் சோள விதைகளில் பகமூன கமத்தொழில் சேவைகள் மன்றத்திற்கு 9,500 கிலோகிராம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 4,910 கிலோகிராம் மாத்திரமே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

(ii) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் நிகழ்சிசத்திட்டம் 2016 இன் கீழ் கைவினைப் பொருள் உற்பத்தி நிலையமொன்றாக 285 முதுவெல்ல கிராம உத்தியோகத்தர் அலுவலகக் கட்டிடம் ரூபா 1,007,784 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், அங்கு கைவினைப் பொருள் உற்பத்தி இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) மெதிரிகிரிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புதிய நகர வாரச் சந்தை 2016 திசெம்பர் 20 ஆந் திகதி நிர்மாணித்து முடிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 29 ஆந் திகதி வரையிலும் அதனைத் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல்**

மாவட்டச் செயலகத்தினால் பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தன.

(i) எலஹர பிரதேச செயலகத்தின் 2015 பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சிட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்த குயவர் கைத்தொழில் மற்றும் அழகுசாதனப் பொருள் உற்பத்தி தொழிற்சாலையினை நிர்மாணிப்பதற்காக ரூபா 882,000 தொகை செலவிடப்பட்டு 2016 ஆம் ஆண்டில் நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கட்டிடம் கைவிடப்பட்டிருந்தது.

(ii) ரஜரட நவோத்ய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எலஹர பிரதேச செயலகப் பிரிவில் 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,685,600 செலவிடப்பட்டு தும்புசார்ந்த உற்பத்தி ஆலையொன்று நிர்மாணிக்கப்பட்டிரந்த போதிலும், 2017 நவம்பர் 09 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு உற்பத்திச் செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) லங்காபுர பிரதேச செயலகத்தில் 2017 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 415,000 பெறுமதியுடைய 02 பண்முகப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) 2016 இன் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் திம்புலாகல பிரதேச செயலகப் பிரிவில் நெசவுக் கைத்தொழில் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 600,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) காலம் தாமதிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஆம் ஆண்டில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் செயற்திட்டத்தின் கீழ் புலஸ்திகம பொது நெசவு நிலையத்தினை அபிவிருத்தி செய்தல் நடவடிக்கைகளிற்காக ரூபா 1,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 வரையிலும் மறுசீரமைத்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்டச் செயலகத்தினால் உப பயிர்ச்செய்கை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 10,890,000 பெறுமதியான 9,000 கிலோகிராம் சோள விதைகளில் 2018 பெப்ரவரி 22 ஆந் திகதி வரையிலும் ரூபா 9,014,500 பெறுமதியான 7,450 கிலோகிராம் சோள விதைகள் பகிர்ந்தளிக்கப்படாது திம்புலாகல கூட்டுறவுச் சங்கக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

## 2.4 கொள்வனவு நடைமுறைகளின் ஊடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

கூறுவிலை கோரல் பட்டியல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் கூறுவிலை கோரப்பட்டிருக்காத நிறுவனத்திற்கு ''பிபிதெமு பொலன்னறுவ'' செயற்திட்டத்தின் கீழ் தமன்கடுவ பிரதேச செயலகத்தினால் பதித்தல் கற்களை கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு வழங்கலிற்காக ரூபா 5,442,301 செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெலிகந்த பிரதேச செயலகத்தின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக பாதுகாப்புமிக்க கராஜ் ஒன்று காணப்படாமையால் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நவீனரக டிரக்டருடன் கூடிய 10 பவுசர்கள் இயற்கை அனர்த்தங்களிற்கு உட்படுத்தப்பட்டு பிரதேச செயலக வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தன.

(ii) கைத்தொழில் வர்த்தக அலுவல்கள் அமைச்சினால் எலஹர பிரதேச செயலகப் பிரிவில் ஆடைத் தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த 25 ஜூகி தையல் இயந்திரங்கள் பாதுகாப்பற்ற விதத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) வாகனப் பயன்பாடு**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**எரிபொருள் நுகர்வினை பரிசோதிக்காமை**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் சகல வாகனங்களினதும் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை 12 மாதங்களிற்கு ஒருமுறை அல்லது 25,000 கிலோமீற்றர் பிரயாணத்தின் பின்னர் அல்லது என்ஜின் மீதான திருத்தவேலைகளின் பின்னர் ஆகிய சந்தர்ப்பங்களில் முதலாவது இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டிய போதிலும், மாவட்டச் செயலகத்திற்குரிய 15 வாகனங்கள் மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) கிரயம் மற்றும் செயற்திறனற்ற விதத்தில் சொத்துக்களை கைதவிர்த்தல்**

தமன்கடுவ பிரதேச செயலகத்தில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 364 பொருள் விடயங்கள் 2017 மே 31 ஆந் திகதி இடம்பெற்ற பொருள் ஏலமிடுதல் மூலம் விற்பனையாகாமை காரணமாக கணக்காய்வுத் திகதியான 2017 நவம்பர் 29 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் குவித்துவைக்கப்பட்டிருந்தன.

**(ஈ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(i) கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்டன.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்த காலம் | |
|---|---|---|---|
| | | 03 ஆண்டுகளிற்கு குறைவாக | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| வாகனங்கள் | 05 | 04 | 01 |
| அரசாங்க விடுதிகள் | 01 | - | 01 |
| நீர் பவுசர்கள் | 02 | 02 | - |
| கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் | 08 | 08 | - |
| e-NIC நிகழ்ச்சித்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் | 223 | 223 | - |

(ii) தமன்கடுவ பிரதேச செயலகத்திற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கிடைத்திருந்த மற்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,075,018 பெறுமதியான 67 பொருட்கள் கணக்காய்வுத் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(iii) பொலன்னறுவ வெள்ளி மாளிகையின் நாடக மண்டபத்தில் காணப்பட்ட ரூபா 391,092 பெறுமதியான நாற்காலிகள் நாடக மண்டபத்தின் ஒலி பெருக்கி முறைமையினை பொருத்துகையிலும் கட்டுப்பாட்டுக் கூடத்தினை தயாரிக்கையிலும் இடம்பெற்றிருந்த மாற்றங்கள் காணரமாக பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தன.

(iv) லங்காபுர பிரதேச செயலகத்தினால் சராசரி வருடாந்த தேவையான 2,000 ஸ்ரிகர்களை விஞ்சி ஏறத்தாழ 87 ஆண்டுகளிற்குப் போதுமானளவு QR (Quick Reader) 175,650 ஸ்ரிகர்ஸ் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன், அவை சில ஆண்டுகளில் அழிவுறும் நிலையில் காணப்பட்டன.

(v) எலஹர பிரதேச செயலகத்தில் 04 சிங்கர் தையல் இயந்திரங்களும் 137 பிளாத்திக்கு நாற்காலிகளும் நலனாளிகளிற்குப் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் குவிக்கப்பட்டிருந்தன.

(vi) எலஹர பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 10,849,152 செலவிடப்பட்டு 7 சேவை வழங்கும் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், நீர் மற்றும் மின்சார வசதிகள் இல்லாமை காரணமாக ஓராண்டிற்கும் மேலாக அக்கட்டிடங்கள் பயன்படுத்தப்பாது காணப்பட்டன.

**(உ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டு அந்த அறிக்கையினை 2018 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், எலஹர பிரதேச செயலகத்தில் வருடாந்த பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டு அந்த அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்கு 2018 மார்ச் 19 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

மீளாய்வாண்டில் தமன்கடுவ, எலஹர, வெலிகந்த, மெதிரிகிரிய போன்ற பிரதேச செயலகங்களிற்குரிய ரூபா 233,604 பொறுப்புக்கள் பதிவேடுகளிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன், ஒதுக்கீட்டுக் கணக்கிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.7 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பொலன்னறுவ மாவட்டச் செயலகத்தின் உத்தியோகபூர்வ வதிவிடமொன்றில் குடியிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 210,098 தொகை மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஹிங்குரன்கொட பிரதேரச செயலகத்திற்குச் சொந்தமான அரசாங்க வதிவிடமொன்றிலிருந்து ரூபா 23,688 தொகை என்ற வகையில் வீட்டு வாடகையினையும் மஹவலி சீ வலயத்தின் வதிவிட வர்த்தக முகாமையாளருக்கு வழங்கப்பட்டிருந்த வீடொன்றிலிருந்து 2016 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகையினையும் இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) எலஹர பிரதேச செயலகப் பிரிவில் 04 சிறுநீரக உதவி பெறுநர்களிற்கு இரண்டு விண்ணப்பங்கள் வீதம் வழங்கப்பட்டு ரூபா 222,000 உதவித் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகத்திற்குரிய லொறி பவுசர் வாகனமும் திம்புலாகல பிரதேச செயலகத்திற்குரிய கெப் வாகனமும் விபத்துக்குள்ளாகியிருந்தமையால் ரூபா 892,813 இழப்பொன்று ஏற்பட்டிருந்த போதிலும், நி.பி. 104 இன் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்புடைய தரப்பினர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) “ரஜரட நவோத்ய” – 2016 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹிங்குரன்கொட பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்தில் நீர்வழங்கல் திட்டத்தை நிர்மாணிப்பதற்காக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு மீளாய்வாண்டில் ரூபா 3,399,782 செலுத்தப்பட்டிருந்தது. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினாலும் இச்செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தமையால் செலுத்தப்பட்டிருந்த தொகையினை ஹிங்குரன்கொட பிரதேச செயலகத்திற்கு மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் 2017 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், பணத்தை மீளப்பெற்றுக்கொண்டிருக்கவுமில்லை.

(உ) தமன்கடுவ பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 11 குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை நிலக் குத்தகை ரூபா 758,658 ஆகும்.

## 2.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சிறுநீரக வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்திற்கான பொதுப் போக்குவரத்துக்காக ரூபா 757,500 தொகையும் சிற்றுண்டி பொதிகளிற்காக ரூபா 250,000 தொகையும் நடனக் குழுவிற்காக ரூபா 75,000 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

## 2.9 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சின் கீழ் பிரதேச செயலகங்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டு அமுலாக்கப்பட்டு வருகின்ற விஞ்ஞான வள நிலையங்கள் வெலிகந்த மற்றும் திம்புலாகல பிரதேச செயலகங்களில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொலன்னறுவ மாவட்டத்தில் ஏறத்தாழ 316.81 ஹெக்டயார் காணி அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் கைப்பற்றப்பட்டுள்ளதாக காணிப் பயன்பாட்டு கொள்கைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், திட்டமிட்ட விதத்தில் இந்தக் காணியினை பயன்படுத்திக்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹிங்குரன்கொட பிரதேச செயலக பிரிவில் 02 தரப்பினர்களால் செல்லுபடியான அனுமதிப்பத்திரமின்றியும் மற்றுமொரு தரப்பினரால் சுற்றாடல் அனுமதிப்பத்திரமின்றியும், கருங்கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகின்றது.

(ஈ) ஹிங்குரன்கொட பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்தில் அரசாங்க காணியொன்றில் நடாத்திச் செல்லப்படுகின்ற கருங்கல் உடைத்தல் இடமொன்றிலிருந்து காணி அனுமதிப்பத்திரத்திற்கான குத்தகையும் புவியியல் மற்றும் சுரங்கம் அகழ்தல் பணியகக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) தமன்கடுவ பிரதேச செயலக காணிப் பிரிவினால் கா.ஆ. 157 பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன், ஆரம்ப இறுதித் தெரிவுப் பட்டியல் மாத்திரம் பேணப்பட்டிருந்தது. காணிப் பதிவேட்டில் அநேக உரித்துரிமையாளர்களின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) எலஹர பிரதேச செயலக பிரிவிலுள்ள இரண்டு திவிநெகும வங்கிச் சங்கக் கணக்குகளின் தகவல்களின் படி 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு 94 கணக்குகளிற்குரிய ரூபா 4,642,094 கடன் தொகையினை மீளளித்தல் 09 மாதங்களிற்கும் மேற்பட்ட காலமாக ஏய்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அந்தக் கடன் மீதியினை அறவிடுதல் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) எலஹர பிரதேச செயலக பிரிவிலுள்ள இரண்டு திவிநெகும வங்கிச் சங்கக் கணக்குகளில் 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு 3293 கணக்குகளிற்குரிய ரூபா 2,515,202 மீதி 03 ஆண்டுகளிற்கும் மேலாக செயற்பாடற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், அவற்றை செயற்படு நிலைக்கு மாற்றுவதற்கு போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மாவட்டச் செயலகத்தின் உத்தியோகபூர்வ வதிவிடத்தில் ஏறத்தாழ 30 ஆண்டுகளாக குடியிருந்த உத்தியோகத்தர் ஒருவர் 2016 ஏப்ரல் 27 ஆந் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் அந்த வதிவிடத்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஐ) நிர்வாக தொகுதி நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் 2 ஆம் கட்டத்தின் பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்கையில் கணிப்பிடப்பட்டிருந்த வேலைத் தளத்திலுள்ள மூலப்பொருட்களின் பெறுமதியினை, மாவட்ட விலைக் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த விலை வீதங்களுடன் ஒப்பிடுகையில் ரூபா 718,750 பாதக முரணொன்று காணப்பட்டது.

(ஒ) 1969 இன் 7 ஆம் இலக்க அரசாங்க வதிவிடங்கள் (உரித்தினை மீளப்பெறல்) அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மாவட்டச் செயலகத்தின் கதுருவெல பதவிநிலை உத்தியோகபூர்வ வதிவிடத்தில் குடியிருக்கும் தேசிய மாணவர் படை உத்தியோகத்தருக்கு பதவிநீக்க அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2018 பெப்ரவரி 15 கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்த வதிவிடத்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 பொதுமக்களிற்கான சேவைகளை நிறைவேற்றுதல்

பொதுமக்களிற்காக நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகளை வழங்குதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் அதிகாரச்சட்டத்தின் கீழ் எலஹர பிரதேச செயலகத்திற்குக் கிடைத்திருந்த 2017 நவம்பர் 02 ஆந் திகதிய NCP/EH/E/1/RIT/9 ஆம் இலக்க தகவல் கோரல் விண்ணப்பத்திற்குரிய தகவல்களை வழங்குவதற்கு 2018 மார்ச் 12 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஹிங்குரன்கொட பிரதேச செயலகத்திற்குரித்தாக 2,396 ஓய்வூதிய விடயம் தொடர்பான கோவைகள் காணப்படுவதுடன், குறித்த விடயத்தினைக் கையாள்வதற்காக ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் நியமிக்கப்பட்டுள்ளமையால் ஓய்வூதிய உரித்தாளர்களிற்கு சிறந்த சேவையினை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

(இ) பிரதேச செயலகங்களிலுள்ள காணிப் பிரிவில் கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வருகைதருகின்ற ஊனமுற்ற மற்றும் விருத்தாப்பிய நபர்களிற்கு தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு வசதியளிக்கும் விதத்தில் காணிப் பிரிவில் போதிய இடவசதிகள் காணப்படவில்லை.

(ஈ) காணிகள் அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் ஹிங்குரன்கொட பிரதேச செயலகத்தின் ஊடாக 2017 நவம்பர் 01 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கோரிக்கைகள் 1,263 ஆகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 44 ஆகும். அவ்வாறே, நடாத்தப்பட்டிருந்த காணிக் கச்சேரிகளின் எண்ணிக்கை 01 ஆகும்.

(உ) ஹிங்குரன்கொட பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்திலுள்ள கருங்கல் அகழ்தல் இடத்தின் காரணமாக மக்களிற்கு ஏற்படுகின்ற இன்னல்கள் மற்றும் சுற்றாடல் பாதிப்புக்கள் தொடர்பில் 2001 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது பொதுமக்கள் முறைப்பாடு செய்திருந்த போதிலும், கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. பிரதேச செயலாளரின் களப் பரிசோதனை அறிக்கை மற்றும் கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் படி இந்த இடத்திற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்க முடியாத நிலை காணப்படுகின்ற போதிலும், பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தரினால் 2017 நவம்பர் 15 மற்றும் 2017 திசெம்பர் 08 ஆகிய திகதிகளில் பொய்யான தகவல்களை உள்ளடக்கி சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. சுற்றாடலின் நிலைத்திருப்பிற்கு அச்சுறுத்தல் தரும் விதத்தில் தவறான அறிக்கை தயாரித்திருந்த இந்த உத்தியோகத்தருக்கு எதிராக தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) எலஹர பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 828 காணி துண்டாடுவோர்களிற்காக 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்த காணிக் கச்சேரி இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 மார்ச் 12 ஆந் திகதிய கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்த காணித் துண்டாடுவோர்களை இனங்கண்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 2.11 கடமைகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டு காலத்தில் மாவட்டச் செயலகத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறி நிதி ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | ரூபா மில்லி. | |
| 2013 | மீண்டெழும் | 273.61 | 260.46 | 13.15 | 4.8 |
| | மூலதனம் | 406.75 | 403.55 | 3.20 | 0.8 |
| | மொத்தம் | 680.36 | 664.01 | 16.35 | 2.4 |
| 2014 | மீண்டெழும் | 367.36 | 357.47 | 9.89 | 2.7 |
| | மூலதனம் | 85.90 | 85.11 | 0.79 | 0.9 |
| | **மொத்தம்** | **453.26** | **442.58** | **10.67** | **2.4** |
| 2015 | மீண்டெழும் | 351.50 | 340.53 | 10.97 | 3.1 |
| | மூலதனம் | 604.20 | 228.46 | 375.74 | 62.2 |
| | **மொத்தம்** | **955.70** | **568.99** | **386.71** | **40.5** |
| 2016 | மீண்டெழும் | 369.80 | 363.81 | 5.98 | 1.6 |
| | மூலதனம் | 5,693.94 | 3,512.33 | 2,181.61 | 38.3 |
| | **மொத்தம்** | **6,063.74** | **3,876.14** | **2,187.60** | **36.1** |
| 2017 | மீண்டெழும் | 416.27 | 415.27 | 0.99 | 0.2 |
| | மூலதனம் | 522.00 | 430.96 | 91.04 | 17.4 |
| | **மொத்தம்** | **938.27** | **846.24** | **92.03** | **9.8** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

**பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காமை**

மாவட்டச் செயலகத்திற்குரிய கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு மதிப்பீடு யதார்த்தமானதாக தயாரிக்கப்பட்டிருக்காமையால் பின்வரும் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது.

மாவட்டச் செயலகத்தின் அலுவலக நிர்வாக கட்டிடத்தொகுதியினை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 500 மில்லியன் தொகையினை உரிய காலத்தில் பயன்படுத்திக்கொள்ள முடியாது போயிருந்தமையால் ரூபா 17.12 மில்லியன் நிதி ஏற்பாடு எலஹர பிரதேச செயலகத்திற்குத் தேவையான தளபாடங்கள் மற்றுறும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மாற்றீடு செய்யப்பட்டிருந்தது.

**2.12 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 27501 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 31.00 | 30.97 | 21.00 | 22.76 | 120.00 | 91.67 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவையிலுள்ள கடன் மீதிகளை அறவிடுதல்**

(i) பொலன்னறுவ மாவட்டச் செயலகம் மற்றும் வெலிகந்த, லங்காபுர, எலஹர மற்றும் திம்புலாகல பிரதேச செயலகங்களில் மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற ஆறு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 933,145 ஆகக் காணப்பட்டதுடன், அந்த மீதியில் ரூபா 448,247 கடன் மீதி 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) லங்காபுர, எலஹர மற்றும் திம்புலாகல பிரதேச செயலகங்களில் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டச் செயலகத்திலும் தமன்கடுவ, திம்புலாகல மற்றும் வெலிகந்த பிரதேச செயலகங்களிலும் சேவை வறிதாக்கப்பட்டிருந்த 06 உத்தியோகத்தர்களிற்குரிய முறையே ரூபா 1,164,963 மற்றும் ரூபா 363,150 கடன் தொகைகள் 01 முதல் 16 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இனங்காணப்படாத செலவு மீதிகள்**

மாவட்டச் செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருக்காத வரவு மீதியாக ரூபா 487,518 காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.13 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிற்காக போதியளவு கட்டுநிதி கிடைக்கப்பெறாமையால் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 2,568 மில்லியன் தொகைக்கான சிட்டைகள் கைவசம் காணப்பட்டன.

(ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் குறித்த பணி முடிவுற்று 10 நாட்களிற்குள் உப கட்டுநிதிகள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மாவட்டச் செயலகம் மற்றும் எலஹர, ஹிங்குரன்கொட, மெதிரிகிரிய, தமன்கடுவ பிரதேச செயலகங்களில் 35 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 758,750 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் குறித்த பணி முடிவுற்று 16 நாட்கள் முதல் 03 மாதங்கள் வரை தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தன.

### 2.14 பொது வைப்புக் கணக்கு

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 07 பொது வைப்புக் கணக்குகளில் காணப்பட்ட மீதி ரூபா 440.36 மில்லின் கூட்டுத்தொகையாகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தின் 02 பொது வைப்புக் கணக்குகளில் காணப்பட்ட 02 வருடங்களை விஞ்சிய ரூபா 4.07 மில்லியன் தொகையான 67 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எலஹர பிரதேச செயலகத்தில் 2015 ஒக்தோபர் முதல் 2017 சனவரி வரையான காலத்தில் தீர்க்கப்படாதிருந்த ரூபா 75,000 சிறுநீரக படி மற்றும் 2015 திசெம்பர் 15 ஆந் திகதி பௌத அலுவல்கள் திணைக்களத்தினால் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் படிகளைச் செலுத்துவதற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 141,400 தொகை ஆகியன குறித்த பணிகளிற்குப் பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு 2017 திசெம்பர் மாதத்தின் இறுதியில் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

(இ) ஹிங்குரன்கொட பிரதேச செயலகத்தில் 2016 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்ளப்படாத ரூபா 76,000 முதியோர் படிகள் மற்றும் வரட்சியினால் பீடிக்கப்பட்டோருக்கு நீர் வழங்குவதற்காக ஹெல்பிங் ஸ்ரீ லங்கா நிறுவனத்தினால் 2017 யூன் 19 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 75,000 தொகை ஆகியன குறித்த பணிகளிற்குப் பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தன.

## 2.15 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்காமை கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | லங்காபுர, ஹிங்குரன் கொட, வெலிகந்த ஆகிய பிரதேச செயலகங்களால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கணனிகள, துணைப்பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | திம்புலாகல, எலஹர ஆகிய பிரதேச செயலகங்களால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | சில்லறைக் காசுப் புத்தகம் | நி.பி. 446 | எலஹர பிரதேச செயலகத் தினால் நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | மின்சார உபகரணங்கள் பதிவேடு | நி.பி. 454(2) | ஹிங்குரன்கொட, மெதிரி கிரிய, எலஹர, திம்புலா கல ஆகிய பிரதேச செயலகங்களால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நி.பி. 110 | தமன்கடுவ பிரதேச செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | பொறுப்புக்கள் பதிவேடு | நி.பி. 214 | தமன்கடுவ, ஹிங்குரன் கொட ஆகிய பிரதேச செயலகங்களினால் நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | அடியிதழ் புத்தகங்கள் பதிவேடு | நி.பி. 341 | ஹிங்குரன்கொட பிரதேச செயலகத்தினால் நாளது வரையாக்கப்பட்டிருக்கவி ல்லை. |
| (ஏ) | வாகனங்களைப் பட்டியலிடும் பதிவேடு | நி.பி. 1647(உ) | ஹிங்குரன்கொட, மெதிரி கிரிய, திம்புலாகல ஆகிய பிரதேச செயலகங்களால் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | கொள்வனவுக் குழுக்களினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினதும் வரவுப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டல் | எலஹர பிரதேச செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | கூறுவிலை கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டல் | மெதிரிகிரிய பிரதேச செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | அலுவலக தொலைபேசி பதிவேடு | நி.பி. 845(1) | தமன்கடுவ பிரதேச செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.16 இணக்கமின்மைகள்

### 2.16.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| **(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | ரூபா | |
| 1980 இன் 31 ஆம் இலக்க தொண்டர் சமூக சேவைகள் அமைப்புக்கள் (பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்) அதிகாரச்சட்டத்தின் 9(இ) ஆம் பிரிவு | - | குறைந்தபட்சம் ஒவ்வொரு ஆண்டிலும் உரிய விதத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள தொண்டர் அமைப்புக்களின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், ஹிங்குரன்கொட, எலஹர, வெலிகந்த ஆகிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 237 | 1,014,340 | மாவட்டச் செயலகத்தினால் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டமைக்கான சான்றிதழ்கள் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (ii) நிதிப்பிரமாணம் 1642 | - | திடீர் விபத்துக்கள் தொடர்பில் அன்றைய தினமே பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வெலிகந்த பிரதேச செயலகத்தில் வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பில் 09 நாட்கள் தாமதிக்கப்பட்டு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. |
| **(இ)** | **தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை**<br>----------------------------------------- | | |
| | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2017 சனவரி 31 ஆந் திகதிய MNPEF.NCD/ AG/MIS/Paddy ஆம் இலக்க நிருபம் | - | நெல் இருப்பு தொடர்பில் தரவு முறைமையொன்றை பேணிவருமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், மாவட்டச் செயலகம் அவ்வாறான கணனித் தரவு முறைமையொன்றை பேணியிருக்கவில்லை. |
| (ஈ) | மதுவரி ஆணையாளர் நாயகத்தின் 2015 ஏப்ரல் 16 ஆந் திகதிய 902 ஆம் மதுவரி அறிவித்தலிலுள்ள 13(ஓ) உப பிரிவின் படி நடவடிக்கை எடுப்பதற்கான 20/197/27/ 02359 ஆம் இலக்க நிருபம். | - | பாடசாலைகள் மற்றும் பிரசித்தமான மதத் தளங்களிலிருந்து உரிய தூரத்தில் அமைக்கப் பட்டிருக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்த 03 நிறுவனங்களிற்காக வெலிகந்த பிரதேச செயலகத்தினால் மதுவரி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/04 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை. | - | |
| | (i) 1.3.3(ஊ) ஆம் பந்தி | | ஆரம்பத் தெரிவுப் பட்டியலை அதற்கு எதிராக முறைப்பாடு செய்வதற்காக 14 நாட்களிற்குள் பிரசித்தப்படுத்த வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டிற்கான தமன்கடுவ பிரதேச செயலகத்தின் காணிப் பிரிவினால் உரிய காலம் கடந்து 13 முதல் 106 நாட்கள் தாமதிக்கப்பட்டு ஆரம்பத் தெரிவுப் பட்டியலை அதற்கு எதிராக முறைப்பாடு செய்வதற்காக பிரசித்தப்படுத்தப் பட்டிருந்தது |
| | (ii) 1.3.3(ஊ) ஆம் பந்தி | - | ஆரம்பத் தெரிவுப் பட்டியலை அதற்கு எதிராக முறைப்பாடு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த 14 நாட்களின் பின்னர் வருகின்ற 14 நாட்களினுள் ஆரம்ப அவதானிப்புக்களை முடிவுறுத்தி இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டு பிரசித்தப்படுத்த வேண்டிய போதிலும், ஆரம்ப எதிர்ப்புக்களின் அவதானிப்புக்கள் இறுதியாக்கப் பட வேண்டிய 14 நாட்கள் கடந்து 61 முதல் 129 நாட்கள் காலவீச்சில் இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. |

**2.16.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணக்கமின்மை**

2015 இன் 05 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரச்சட்டத்தின் 115 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து தொழில்தருனர்களினாலும் மாதாந்த மொத்தச் சம்பளம் ரூபா 62,500 அல்லது வருடாந்தச் சம்பளம் ரூபா 750,000 இனை விஞ்சுகின்ற தொழிலாளர்களின் சம்பளத்தில் உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், மெதிரிகிரிய பிரதேச செயலகத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.17 உள்ளகக் கணக்காய்வு**

கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தனது திணைக்களத்தில் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள அதற்குரித்தான கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக தனது திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை தாபித்தல் வேண்டுமென நிதிப்பிரமாணம் 133 இன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் தயாரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் தமன்கடுவ பிரதேச செயலகத்திற்கான உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருக்காமை காரணமாக அச் செயலகம் மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக 05 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் 10 பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.18 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினைத் தாபித்து, மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காலாண்டிற்கு ஒருமுறை 04 கூட்டங்களை நடாத்தி அதன்மூலம் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறுவனத்தில் அமுலாக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட 03 கூட்டங்களில் எடுக்கப்பட்டிருந்த தீர்மானங்களில் சில தீர்மானங்கள் மாவட்டச் செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.19 மனிதவள முகாமைத்துவம்**

**2.19.1 இணைக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளனி வேதனங்கள்**

மேற்படி 2.1 மற்றும் 2.2 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமாகக் காணப்பட்ட மற்றும் மேலதிகப் பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக மாவட்டச் செயலகத்தினால் ஆளனி வேதனங்கள் செலவின வகுதியில் ரூபா 312.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, ஆளொருவருக்கான செலவினம் ரூபா 377,444 ஆகக் காணப்பட்டது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 41 | 35 | 6 |
| மூன்றாம் நிலை | 22 | 8 | 14 |
| இரண்டாம் நிலை | 979 | 702 | 277 |
| ஆரம்பநிலை | 92 | 82 | 10 |
| மொத்தம் | 1134 | 827 | 307 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் மாவட்டச் செயலகம் மற்றும் 07 பிரதேச யெலகங்களில் காணப்பட்ட மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 307 ஆகக் காணப்பட்டதுடன் 161 அபிவிருத்தி உத்தியொகத்தர் பதவிகளும் 28 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும் 52 கிராம உத்தியோகத்தர் பதவிகளும் பிரதானமாக வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) மாவட்டச் செயலகம் மற்றும் 07 பிரதேச யெலகங்களிற்காக 8 தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு செயலகத்தினாலும் அப்பதவிற்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெலிகந்த, எலஹர, லங்காபுர, மெதிரிகிரிய ஆகிய பிரதேச செயலகங்களில் நிர்வாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாகக் காணப்படுவதுடன், 5 பிரதேச செயலகங்களில் காணப்படுகின்ற 5 நிர்வாக கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதன் மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ஓராண்டிற்கும் மேலாக நிலவி வருகின்ற அந்தப் பதவிகள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாவட்டத்தில் அதிகளவு எண்ணிக்கையிலான அபிவிருத்திச் செயற்திட்டங்கள் இடம்பெற்றுவருகின்ற இக்காலத்தில் 7 பிரதேச செயலகங்களிற்காக 14 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பில் காணப்படுகின்ற போதிலும், 6 பிரதேச செயலகங்களில் 6 வெற்றிடங்கள் காணப்படுவதுடன், அந்த வெற்றிடங்களை நிரப்புவதன் மீது உயர் முகாமைத்துவம் விசேட கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(உ) பொலன்னறுவ மாவட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பிரதேச செயலாளர்களின் எண்ணிக்கை 07 ஆவதுடன், அவற்றில் 3 வெற்றிடமாகக் காணப்படுவதனால் பதிற்டமை நியமனங்கள் ஓராண்டிற்கும் மேற்பட்ட காலமாக வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவின் மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வெலிகந்த பிரதேச செயலகத்தில் 5 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக தொடர்ச்சியாக கடமையாற்றிவருகின்ற 10 உத்தியோகத்தர்களிற்கும், ஹிங்குரன்கொட பிரதேச செயலகத்தில் 11 உத்தியோகத்தர்களிற்கும், எலஹர பிரதேச செயலகத்தில் 34 உத்தியோகத்தர்களிற்கும், தமன்கடுவ பிரதேச செயலகத்தில் 30 உத்தியோகத்தர்களிற்கும், இடமாற்றங்கள் வழங்கப்படாது பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**2.20 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

அரசாங்க நிதி, வருமானம், முத்திரைகள் அல்லது பொருட்களை தமது பொறுப்பில் வைத்துள்ள, அல்லது அரசாங்க நிதியினை பகிர்ந்தளித்தல், முத்திரைகள் அல்லது பொருட்களை விநியோகித்தல் தொடர்பில் நிர்வாக ரீதியில் பொறுப்புவாய்ந்த அல்லது அதிகாரப் பகிர்ந்தளித்தலின் கீழ் அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும், அரசாங்க கணக்குகளிற்கு உரித்தான கொடுப்பனவு உறுதிச்சிட்டைகளை சான்றுறுதிப்படுத்துகின்ற மற்றும் காசோலைகளில் கையொப்பமிடுகின்ற நபர்களும் தமக்குரிய கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுறவதாக 612 ஆவது அரசாங்க உத்தியோகத்தர் பிணைக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் பிணைப் பணத்தினை வைப்புச்செய்ய வேண்டிய போதிலும், மெதிரிகிரிய மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகங்களில் பிணைப்பணம் வைப்புச் செய்யவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெறப்பட்டிருக்கவில்லை.

**2.21 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கு தயாராதல்**

(அ) 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டைத் தயாரிக்கையில் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBD/4/1/2-2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 03 ஆவது கொள்கை உபாயவழி அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆர்வமுடைய தரப்பினர்களை அறிவுறுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் எவை என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தரவு முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிற்குத் தேவையான பௌதீக வசதிகள் போதியளவில் வழங்கப்பட்டிருக்கவில்லை.